# IN THE COURT OF THE DISTRICT MUNSIF OF SULUR
## (DEPOSITION OF WITNESS

**வா.சா.3-)**

அசல் வழக்கு எண். 111/2018

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ராமசாமி | தாலூக்கா | |
| தந்தை பெயர் | முருகசாமி | கிராமம் | இருகூர் |
| தொழில்/பணி | கிராம நிர்வாக அலுவலர் | மதம் | |
| வயது | | | |

Solemnly affirmed and sworn by Tmt.R.Lakshmi, Junior Assistant on 28.07.2025 is accordance with the provision of Act X of 3331

**முதல் விசாரணை**

1. நான் இருகூர் கிராம நிர்வாக அலுவலராக பணி புரிந்து வருகிறேன். இருகூர் கிராமத்திற்கு உட்பட்ட வருவாய் ஆவணங்கள் எனக்கு தெரியும். இருகூர் கிராம க.ச.எண்.148/2F ன் வருவாய் ஆவணங்கள் யார் பெயரில் உள்ளது என்பதற்கான ஆவணங்களை கொண்டு வந்துள்ளேன். **புல எண்.148/2F க்கான சிட்டா வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** சிட்டா படி ரங்கசாமி மகன் நடராஜன் பெயரில் உள்ளது. ரங்கசாமி மகள் துளசியம்மாள், ரங்கசாமி மகள் ராமாத்தாள், லேட் சுப்பையன் மனைவி சரோஜினி, லேட் சுப்பையன் மகன் சுந்தரேசன், லேட் சுப்பையன் மகள் ஜெயந்தி, லேட் சுப்பையன் மகள் சுமதி என்பவர்கள் பெயரில் உள்ளது.

2. ரங்கசாமி மகள் துளசியம்மாள், ரங்கசாமி மகள் ராமாத்தாள், ஆகியவர்களின் பெயர் எந்த காலக்கட்டத்தில் சிட்டாவில் சேர்க்கப்பட்டுள்ளது என்றால் 06.11.2023 அன்று சேர்க்கப்பட்டுள்ளது. மேற்படி சொத்துக்கான வருவாய் ஆவணங்கள் 1991 முதல் 2023 வரை யார் யார் பெயரில் இருந்தது என்றால் ரங்கசாமி கவுண்டர் பெயரில் இருந்தது. 1991 ல் ரங்கசாமி கவுண்டர் குடும்பத்திற்கு இடையே பாகசாசனம் ஏற்படுத்தப்பட்டது என்றும், அதற்கு பின்னிட்டு வருவாய் ஆவணங்கள் யார் பெயரில் ஏற்படுத்தப்பட்டது என்றால் 21.07.2000 தேதியில் சர்வே எண்.148/2F

காலையில் ரங்கசாமி கவுண்டர் மகன் சுப்பையன் பெயர் கூட்டாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. மேற்படி கூட்டாக தாக்கல் செய்யப்பட்டதன் பெயரில் யார் யார் பெயர் சேர்க்கப்பட்டுள்ளது என்றால் வட்டாட்சியர் அலுவலகத்தில் அது சம்மந்தமான கோப்புகளை வாங்கி பார்த்தால்தான் தெரியும். துளசியம்மாள், ராமாத்தாள் பெயர் 06.11.2023 அன்று சேர்க்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். சொத்தின் அ-பதிவேடு ப.ரங்கசாமி கவுண்டர் பெயரில் உள்ளது. 2018 ம் ஆண்டு வரை மேற்படி சொத்தின் வருவாய் ஆவணங்கள் ரங்கசாமி மற்றும் அவரது இரண்டு மகன்கள் சுப்பையன், நடராஜன் பெயர்களில் உள்ளது என்றால் சரிதான். பட்டா மாறுதல் செய்ததை பார்க்க வேண்டும்.

4. RSR புத்தகம் எண். 1 பக்கம் எண்.88, வரிசை எண்.9 ல் உள்ள புல எண்.148/2F க்கான ரங்கசாமி கவுண்டர் பெயரில் உள்ள அ-பதிவேடு தாக்கல் செய்யப்படுகிறது. **புல எண்.148/2F க்கான ரங்கசாமி கவுண்டர் பெயரில் உள்ள அ-பதிவேடு வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. இருகூர் கிராம செட்டில்மெண்ட் ஜமாபந்தி புத்தகம் பட்டா எண்.1197 க்கான சிட்டா வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை :-**

1. வா.சா.ஆ.7 ல் புல எண்.148/2F யார் பெயரில் ஆரம்பத்தில உள்ளது என்றால் ரங்கசாமி கவுண்டர் பெயரில்தான்இருந்தது. MTR நம்பர் 745/S/2000 தேதி 21.07.2000 உத்தரவை கொண்டுவந்தால் தான் அதன்பின்னிட்டு யார் யார் பெயரில் கூட்டாக ஏற்பட்டது என்று தெரியும் என்றால் சரிதான். வா.சா.ஆ.6 ஆவணத்தில் ரங்கசாமி பெயர் மட்டும் உள்ளது என்றால் சரிதான். இன்றைய தேதியில் வருவாய் துறை ஆவணங்கள் படி புல எண்.148/2F கூட்டு பட்டாவாக உள்ளது என்றால் சரிதான்.

**மறு விசாரணை இல்லை.**

Taken down by me to open court read over to the witness and acknowledged by him / her to be correct

Sd,/M.Santhosham

District Munsif, Sulur